


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (8.1.2026) அண்ணா அறிவாலயத்தில், அ.தி.மு.க. சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சுப்புரத்தினம், பாலகங்காதரன் ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைந்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, கழக பொருளாளர் டி.ஆர். பாலு, அமைச்சர் அர. சக்கரபாணி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் மனோஜ் பாண்டியன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.



நெல்லை மாவட்டம் வண்ணார்பேட்டை மொத்த விற்பனை பண்டகசாலை கிடங்கி வளாகத்தில் அமைந்துள்ள நியாய விலைக் கடையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா சுகுமார்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம். எல்.ஏ. மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார். உடன் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## ‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ திட்டத்தைப் பற்றி ஆதாரமற்ற அவதூற்றைக் கக்கியிருக்கிறார்!

# கழக அரசு மக்களின் கனவைக் கேட்டதற்கே பழனிசாமி ஏன் அலறுகிறார்?

## அமைச்சர் எஸ்.ரகுபதி காட்டமான பதிலடி!

**சென்னை, ஜன.9-**

**அடிமைக் கனவோடே வாழும் பழனிசாமி ‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ திட்டத்தைப் பற்றி ஆதாரமற்ற அரைவேக்காட்டுத்தனமான அவதூற்றைக் கக்கியிருக்கிறார் எனவும் மக்களின் கனவைக் கேட்டதற்கே பழனிசாமி ஏன் அலறுகிறார்? ஆகாயத்திற்கும் வானத்திற்கும் குதிக்கிறார் எனவும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் ரகுபதி காட்டமாகக் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

மக்களை ஏமாற்றும் காதில் பூ சுற்றும் வேலையை எல்லாம் செய்த பழனிசாமி, ‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ திட்டத்தை பற்றிப் பேசுவதற்கு அருகதை அற்றவர். தி.மு.க. அரசு புதுத் திட்டம் கொண்டு வந்தால், எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு திகு திகு என எரிகிறது. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணியில் அன்பு மணி சேர்ந்த போது, ”வேடந்தாங்கல் பறவை போல அடிக்கடி அன்புமணி கூட்டணி மாறிக் கொண்டிருக்கிறார்” என விமர்சித்த பழனிசாமி தான், இன்றைக்கு வேடந்தாங்கலில் அன்புமணியோடு ஐக்கியமாகியிருக்கிறார்.

**ஒப்பாரி ஓலமிடும் பழனிசாமி!**

கூட்டணிக்கு ஆள் கிடைக்காதா? என ஓர் ஆண்டுகாலமாக ஓலமிட்டுக் கொண்டிருந்த பழனிசாமிக்கு, தி.மு.க. அரசின் ‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ திட்டம் நினைவுக்கு வந்து, ஒப்பாரி ஓலமிட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டு மக்களின் கனவுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க வேண்டும் எனும் தொலைநோக்கோடு மக்களின் எண்ண ஓட்டங்களை அறிந்து செயலாற்ற ‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ எனும் புதுமையான திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் ஜனவரி 9 ஆம் தேதி தொடங்கி வைக்க உள்ளார்.



**பழனிசாமியின் அரைவேக்காட்டுத் தனம்!**

தமிழ்நாடு அரசின் சார்பில் தன்னார்வலர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் குடும்பங்களையும் சந்தித்து அவர்களின் கனவுகளைக் கேட்டறிய உள்ளனர். அவர்களின் கனவுகளுக்குச் செயல்வடிவம் கொடுத்து நிறைவேற்றுவதை அரசு இலக்காக வைத்துச் செயல்பட உள்ளது. ஆனால் மக்களைப் பற்றி எந்த அக்கறையும் இல்லாமல் எப்பொழுதும் அமித்ஷா காலடியில் கிடக்கும் அடிமைக் கனவோடே வாழும் பழனிசாமி இந்தத் திட்டத்தைப் பற்றி ஆதாரமற்ற அரைவேக்காட்டுத் தனமான அவதூற்றைக் கக்கியிருக்கிறார்.

‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ திட்டம் வரவேற்பை பெறும் போது, அதிலும் தனக்கு ஸ்கோர் கிடைக்குமா? எனப் பாய்ந்து வந்து, புகுந்து கொள்வார். எப்படி லேப் டாப் திட்டம், பொங்கல் பரிசுத் தொகுப்பு எனத் தன்னை இணைத்துக் கொண்டாரோ அது போல!

‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ என்று ஒரு திட்டத்தை தி.மு.க. அரசு அறிவித்து, மக்களின் கனவைத்தான் கேட்கிறது. அதன்பிறகுதான் அது திட்டமாகச் செயல்வடிவம் பெறும். கனவைக் கேட்டதற்கே பழனிசாமி ஏன் அலறுகிறார்? ஆகாயத்திற்கும் வானத்திற்கும் குதிக்கிறார்?

**பழனிசாமியின் கபட வேலைகள்!**

ஆட்சி முடியும் நேரத்தில், கனவைச் சொல்லுங்கள் என்று கேட்கிறார்களே எனக் கேள்வி எழுப்பியிருக்கிறார் பழனிசாமி. 2021ல் ஆட்சி முடியும் நேரத்தில் குறைகளை அரசுக்குத் தெரிவித்துத் தீர்வு காணும் 1100 எண் தொலைபேசி சேவை திட்டத்தைத் தேர்தல் தேதி அறிவிப்பதற்கு 10 நாள் முன்பு பழனிசாமி கொண்டு வந்தாரே... அது கடைந்தெடுத்த கபட வேலை இல்லையா? 2021 தேர்தல் தேதி அறிவிப்புக்கு இரண்டு நாள் முன்பு அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டது பழனிசாமியின் உதடுகள் தானே! மினி கிளினிக் தொடக்கம், 9, 10, 11 வகுப்பு மாணவர்களுக்கு ஆல் பாஸ், வன்னியர் உள் ஒதுக்கீடு என எத்தனை குட்டிக்கர ணங்களைத் தேர்தல் நேரத்தில் பழனிசாமி அடித்தார்?

மக்களை ஏமாற்றும் காதில் பூ சுற்றும் வேலையை எல்லாம் செய்தவர், தி.மு.க. அரசின் ‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ திட்டத்தை பற்றிப் பேசுவதற்கு அருகதை அற்றவர்.

பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகள் மற்றும் புகார்களை முதல்வர் அவர்களிடம் நேரடியாகவோ அல்லது இணையதளம் வாயிலாகவோ தெரிவித்து மனுக்கள் மீது உரிய காலக்கெடுவுக்குள் தீர்வு காணப்பட்ட திட்டம்தான் உங்களுடன் ஸ்டாலின் திட்டம். முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட இந்த மக்கள் தொடர்புத் திட்டம் மகத்தான வரவேற்பை பெற்றது. அப்படி மக்களோடு நேரடி தொடர்பு கொண்ட திட்டம் எப்படி வெற்றி பெற்றதோ அதேப் போல ‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ திட்டமும் நிச்சயம் வெற்றி பெறும்.

**மக்கள் திட்டங்கள் எடப்பாடிக்கு எட்டிக் காயாகத்தான் இருக்கும்!**

பேரறிஞர் அண்ணா அவர்கள், மக்களிடம் செல் என்றார். அவரின் கொள்கையை நடைமுறைப்படுத்தி கொண்டிருக்கும் தி.மு.க. அரசு, ‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ திட்டத்தை செயல்படுத்துவதற்காக மக்களை சந்திக்க திட்டமிட்டி ருக்கிறது. மக்களைவிட்டு எப்போதுமே எட்டி நிற்கும் எடப்பாடிக்கு இந்தத் திட்டம் எட்டிக்காயாகத் தான் இருக்கும்!

அடிமை ஆட்சி நடத்திய பழனிசாமியின் ஆட்சியில் தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொரு நாளும் கொடுங்கனவுக்கு ஆளான அவலநிலையை மாற்றி, மக்கள் வாழ்வில் விடியலை ஏற்படுத்தியிருப்பது திராவிட மாடல் ஆட்சிதான்.

**பழனிசாமியின் கனவு கானல் நீர்தான்!**

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு மக்களின் எண்ணம் அறிந்து செயலாற்றும் அரசு, அவர்களின் எண்ணங்களைச் செயல்படுத்தும் அரசு, இன்று தமிழ்நாட்டு மக்களின் கனவுகளை நிறைவேற்றவும் திட்டம் தீட்டியிருக்கிறது. திராவிட மாடல் அரசு செயல்படுத்தும் நலத்திட்டங்களின் மீது அவதூற்றைப் பரப்புவதையே முழுநேரத் தொழிலாகச் செய்கிறார் பழனிசாமி. வீண் அவதூறுகளைப் பரப்பிப் புலம்புவதை நிறுத்திவிட்டு, தமிழ்நாட்டுக்குப் பயனுள்ள கனவு எதையாவது வைத்திருந்தால் தெரிவிக்கட்டும். அதையும் தமிழ்நாடு அரசு நிறைவேற்றும். அடுத்த முதல்வர் நான்தான் என்ற பழனிசாமியின் கனவு மட்டும் எப்போதும் கானல் நீராகத்தான் இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

## இதுவரை ரூ.6 கோடியே 39 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 39 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 08-01-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | டி.சுந்தர்ராஜ், செங்குடி, வழுவூர் அஞ்சல், குத்தாலம் வட்டம், மயிலாடுதுறை | – 25,000/– |
| 2. | உ.மருதையன், கோவில்வெண்ணி, நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் | – 25,000/– |
| 3. | என். கலியமூர்த்தி, அழகியமணவாளம் பெரியார் நகர், திருமானூர், திருச்சி | – 25,000/– |
| 4. | சி. கலியமூர்த்தி, திருவெங்கனூர் கிராமம், வடுகபாளையம் மஜரா, அரியலூர் | – 25,000/– |
| 5. | ஆர்.பாலு, நடுத் தெரு, எடப்பாடி, சேலம் மாவட்டம் 637 101. | – 25,000/– |
| 6. | கு.சண்முகசுந்தரம், 7வது வார்டு, பாண்டமங்கலம், நாமக்கல் மாவட்டம். | – 25,000/– |
| 7. | எம். ஜாபர் அலி, மதரசா வீதி, ஆனைமலை, கோவை மாவட்டம். | – 25,000/– |
| 8. | பெ.சுப்பிரமணியம், தா.காளிபாளையம், தாராபுரம், திருப்பூர் மாவட்டம். | – 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |



தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் சென்னையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000/– ரொக்கம் வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்ததை தொடர்ந்து மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட செட்டிகுளம் கிராமத்தில் உள்ள நியாய விலை கடையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் தலைமையில் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கினார். உடன்சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன், மதுரை மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.



தென்காசி மாவட்டம் மத்தளம்பாறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் உள்ள நியாய விலை கடையில் 4,79,753 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும்,இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் வசிக்கும் 184 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புபையுடன் ரூபாய் 3000 ரொக்கத் தொகை மற்றும் வேட்டி, சேலையினை மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார், கூட்டுறவு சங்கங்களின் தென்காசி மண்டல இணைப்பதிவாளர் நரசிம்மன் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன்,கீழப்பாவூர் ஒன்றிய குழு தலைவர் காவேரி சீனித்துரை,குணராமநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் சுபா சக்தி,மத்தளம் பாறை ஊராட்சி மன்ற தலைவர் மைதிலி மகேஷ்,மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சிவக்குமார் உட்பட அரசு அலுவலர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் பலர் உள்ளனர்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே கோவில்பட்டி ரேஷன் கடையில் பொங்கல் பரிசுத் தொகுப்பை ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் துவக்கி வைத்தார். உடன் மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.